Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-1**

Name : முருகையா
Father / Husband name : அண்ணாதுரை
Village : திண்டிவனம்
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1,A4 present. A2, A3 produced from custody. APP present. counsel for A1, A2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் காவல் நிலையத்தில் த.கா. பணிபுரிகிறேன். கடந்த 10.09.2025 அன்று மாலை சுமார் 18 மணியளவில் முழுசீருடையில் ரோந்து அலுவலாக பணியிலிருந்தபோது காவல் நிலையத்திலிருந்து வரப்பட்ட 100 அவசர கால அழைப்பின்பேரில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழே சென்னை பேருந்து நிறுத்தம் அருகே குடிபோதையில் சிலர் தகராறு செய்வதாக கிடைத்து நானும் என்னுடன் த.கா. 274 நாகராஜ் என்பவரும் திண்டிவனம் மேம்பாலம் கிழே சென்று பார்க்கும்போது சரித்திர பதிவேடு குற்றவாளிகள் அப்பு (எ) ஆகாஷ் த/பெ விஜயக்குமார், 2. ராஜேஷ் த/பெ கண்ணன், 3. பிரதீப்குமார் (எ) சேட்டு த/பெ கண்ணன், 4. அருள்பிரகாஷ் (எ) சின்னராசு ஆகிய நான்குபேரும் அங்கிருந்த பொதுமக்களை பார்த்து அசிங்கமாகபேசி நாங்கள் தான் இங்க ரவுடி என்று அங்கு வரும் பேருந்துகளை வழிமறித்து போக்குவரத்து இடையூறு செய்திருந்தவர்களை இவ்வாறு செய்யக்கூடாது செல்லுமாறு சொன்னபோது எங்களை பார்த்து போலிஸ்ன்னா என்ன பெரிய பூலா என்றும் இங்கிருந்த செல்லவில்லை என்றால் உங்கள் கழுத்தை அறுத்துவிடுவதாகவும், தேவிடியா பசங்களா இங்கிருந்து கிளம்புங்கடா என்று அசிங்கமாக பேசினார்கள். நாங்கள் எதுவாயிருந்தாலும் காலையில் பேசிக்கலாம் என்று சொன்னதற்கு அப்பு (எ)

ஆகாஷ் என்பவர் எனது சட்டையை பிடித்து இழுத்து கிழே தள்ளினார். ராஜேஷ் என்பவர் கிழே கிடந்த கல்லை எடுத்து எனது வலது கை மணிக்கட்டில் அடித்தார். சேட்டு, சின்னராசு ஆகியோர்கள் கையாலும், காலாலும் உதைத்தார்கள். என்னுடன் இருந்த காவலர் நாகராஜ் என்பவர் என்னை மீட்டு அங்கிருந்த பொதுமக்கள் உதவியோடு அவர்களை பிடிக்க முயற்சித்தபோது 4 பேரும் தப்பியோட முயன்றார்கள். இதில் ராஜேஷ் என்பவரை மடக்கி பிடித்து காவல் நிலையம் அழைத்துவந்து ஒப்படைத்தோம். பின்னர் உதவி ஆய்வாளரிடம் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணயைில் சொன்ன விவரத்தை தான் எனது விசாரணையிலும், புகாரிலும் சொன்னேன் என்றால் சரிதான். அலுவலக பணி என்பது காவல் நிலையப்பணியில் இருந்தேனா என்றால் இல்லை, ரோந்து பணியில் இருந்தேன். ரோந்துக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எனது சொந்த வாகனத்தில் சென்றேன். த.கா. நாராஜன் எவ்வாறு வந்தார் என்றால் அவரின் வாகனத்தில் வந்தார். புகாரில் இருச்சக்கர வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் எந்தெந்த இடத்திற்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சென்னை மேம்பாலத்திலிருந்து ஆர்யாஸ், ஜக்காம்பேட்டைவரை சென்றேன். பேருந்துகளை வழிமறித்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சின்னராசு, பிரதீப்குமார் ஆகியோர்கள் என்னை கையாலும், காலாலும் தாக்கியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். எதிரிகளில் யார் என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அப்பு (எ) ஆகாஷ் திட்டியதாக சொன்னேன். என்னை அடித்ததாக சொல்லும் கல்லை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் அதிகமாக மக்கள் கூட்டம் இருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் சாட்சியாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் தேதி, இடம் தனியாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், புகார் கொடுத்த அன்று சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்து இரண்டு மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் 500 மீ தூரம் என்றால் சரிதான். சாட்சிகள் நாகராஜ் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்னுடன் பணிபுரிபவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவயிடத்தில் எந்தபிரச்சனையும் செய்யவில்லை, மேல்அதிகாரி சொன்னதால் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-2**

Name : நாகராஜன்
Father / Husband name : அம்பலவாணன்
Village : திண்டிவனம்
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1,A4 present. A2, A3 produced from custody. APP present. counsel for A1, A2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் காவல் நிலையத்தில் 274 த.கா. பணிபுரிகிறேன். கடந்த 10.09.2025 அன்று மாலை சுமார் 6 மணியளவில் அவசர எண் 100 ன் மூலமாக எங்கள் காவல் நிலையத்தில் பெற்ற தகவலின்பேரில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் சென்னை பேருந்து நிறுத்தத்தில் யாரோ சிலர் குடித்துவிட்டு தகராறு செய்வதாக கிடைத்த தகவலின்பேரில் நானும் த.கா.1863 முருகையா அவர்களும் சம்பவயிடம் சென்று பார்த்தபோது அப்பு (எ) ஆகாஷ், ராஜேஷ், சேட்டு (எ) பிரதீப்குமார், அருண்பிரகாஷ் (எ) சின்னராசு ஆகியோர்கள் குடித்துவிட்டு மதுபோதையில் இங்க நாங்க தான் பெரிய ரவுடி எங்களிடம் யாரும் வைத்துக்ககூடாது என்று பொதுமக்களுக்கு இடையூறாக இருந்துள்ளார்கள். இதனை நானும் அ.சா.1 ம் கேட்டபோது போலிஸ்ன்னா பெரிய பூலா என்று கேட்டு தேவிடியா பசங்களா இங்கிருந்து ஓடிவிடுங்கள் இல்லையென்றால் கழுத்தை அறுத்துபோட்டுவிடுவோம் என்று பேசினார்கள். நாங்கள் எதிரிகள் போதையில் இருந்ததால் காலை பேசிக்கொள்ளலாம் என்று சொன்னோம். அதற்கு அப்பு (எ) ஆகாஷ் அ.சா.1 ன் சட்டையை பிடித்து கீழே தள்ளினார், கீழேவிழுந்த அ.சா.1 ஐ ராஜேஷ் என்பவர் வலது கையின் மணிக்கட்டில் அடித்தார்,

பிரதீப்குமாரும், சின்னராகவும் அ.சா.1 ஐ கையாலும், காலாலும் அடித்தார்கள். இதில் நான் அ.சா.1 ஐ மீட்டு பொதுமக்கள் உதவியுடன் எதிரிகளை பிடிக்க முற்பட்டபோது அவர்கள் தப்பித்து ஓடிவிட்டார்கள். இதில் எதிரி ராஜேஷ் என்பவரை மட்டும் பிடித்து காவல் நிலையம் அழைத்துவந்து முருகையா புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தர்கள்.

**<u>1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அசா.1 புகார் கொடுத்தார், நான் அவருடன் இருந்தேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மதியம் 2 மணியிலிருந்து ரோந்து பணியிலிருந்தேன், சம்பவயிடத்திற்கு 18 மணிக்கு சென்றேன். ரோந்து பணி எந்தெந்த இடங்களில் மேற்கொண்டேன் என்றால் மயிலம் ரோட்டிலிருந்து காவேரிப்பாக்கம் வரை ரோந்து பணியிலிருந்தேன். ரோந்துக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நான் எனது சொந்த வாகனத்தில் சென்றேன். அ.சா.1 முருகையா அவரின் அவரின் வாகனத்தில் வந்தார். மேற்படி விவரத்தை உதவி ஆய்வாளரின் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகளின் யார் அசிங்கமாக திட்டியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான்கு எதிரிகளும் அசிங்கமாக திட்டினார்கள். எதிரி ராஜேசை எந்த வாகனத்தில் அழைத்துச்சென்றோம் என்றால் எனது வாகனத்தில் அழைத்துச்சென்றேன். 6 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று 10 நிமிடம் சம்பவம் நடந்து 06.10 மணியளவில் காவல் நிலையம் வந்தேன் என்றால் சரியல்ல, சுமார் 30, 45 நிமிடங்கள் ஆனது. சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் 500 மீ தூரம் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடன் பணிபுரிபவர், விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றவுடன் அ.சா.1 புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து புகார் கொடுத்தார். அ.சா.1 ஐ நான் மருத்துமவனைக்கு அழைத்துச்சென்றேனா என்றால் இல்லை,

அ.சா.1 அவராக சென்றார். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் 24 மணி நேரமும் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். எதிரிகள் குடித்திருந்ததற்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச்சென்றோமா என்றால் அதுபற்றி தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, உயர்அதிகாரிடி கேட்டுக்கொண்டதால் அ.சா.1 புகார் கொடுத்தார், அதற்கு ஆதரவாக நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

## 3, 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.